# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்** **R.சந்திரசேகரன்.**
**தலைவர்** **பொதுச்செயலாளர்**

## <u>சுற்றறிக்கை – 8</u>

<u>27-06-2016</u>

அன்புடையீர்

வணக்கம்.

1. நமது சங்கத்தின் சுற்றறிக்கை எண்-6 நாள்-28-05-2016-ல் குறிப்பிட்டிருந்தபடி சில பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

   வட்டத்திற்குள் வழங்கப்படும் விருப்ப மாறுதல்களுக்கு சென்னை தலைமை அலுவலகத்தில் முன் ஒப்புதல் பெற்றுத்தான் உத்திரவு வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனை வாரியத்தின் 18-06-2016 உத்திரவின் மூலம் விலக்கிக் கொள்ளப் பட்டுள்ளது.

   ரூ.5400+1900 சம்பளம் பெறும் மஸ்தூர், கள உதவியாளர், கணக்கீட்டாளர்2-ம் நிலை மற்றும் அலுவலக உதவியாளர் போன்ற 32 பிரிவு ஊழியர்களுக்கு, சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பினை சரண்டர் செய்து பணம் பெறுவதில் உள்ள, பாரபட்சத்தை களைந்திட, நிலையாணைகள் திருத்தம் செய்யவேண்டும் என்ற நமது கோரிக்கையின் மீதான பேச்சு வார்த்தை 20-06-2016 அன்று சென்னை தொழிலாளர் இணை ஆணையர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கோரிக்கைக்கு ஆதரவாக சம்மேளனம், INTUC (சேவியர்) NLO, BMS ஆகிய சங்கங்கள் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டன. டாக்டர் அம்பேத்கர் சங்கம் மற்றும் ஜனதா தொழிற்சங்கங்கள் கோரிக்கையினை ஆதரித்து கடிதம் கொடுத்துள்ளன. மின்சாரவாரியத்தில் மொத்தம் 17 சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதால் அனைத்து சங்கங்களையும் , அழைத்து கோரிக்கையின் மீது அவர்களது கருத்தையும் அறிந்து நிலையாணை விதிகளை திருத்தம் செய்திடவேண்டும் என்று நாம் வற்புறுத்தியதன் பேரில் பேச்சுவார்த்தை 18-07-2016 அன்று நடைபெறும் என்றும் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் 17 சங்கத்திற்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

   உள்முகத்தேர்வில் இளநிலை உதவியாளர் நியமனத்திற்கு பட்டப்படிப்பு என்று நிர்ணயித்ததை எதிர்த்து நாம் தொடர்ந்த வழக்கில் சமரச பேச்சுவார்த்தை 22-6-2016 அன்று நடைபெற்றது. சமரசப் பேச்சுவார்த்தையின் போது “ நிர்வாகம் நமது கோரிக்கை குறித்து வாரிய கூட்டத்தில் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக” தெரிவித்ததால் பேச்சுவார்த்தை 28-06-2016-க்கு தள்ளி வைக்கப் பட்டது.

   1.1.94-ல் வருவாய் மேலாளராகச் சேர்ந்து 1.1.2003-ல் தேர்வுநிலை பெற்றவர்களுக்கு ரூ.5850-200-11050-க்குப் பதிலாக, ரூ.8100-275-15225 சம்பளம் வழங்கவேண்டும் என்ற நமது கோரிக்கை தொழிலாளர் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு அதன்படி உத்திரவும் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இதனால் 1000-க்கும் மேற்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் மாதம் ரூ.225- கூடுதலாக கிடைக்கும். அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட சுமார் ரூ.10000-த்துக்கு மேற்பட்ட தொகை திரும்ப வழங்கப்படும்.

2. களப்பிரிவு இருவழிப்பாதை பதவி உயர்வில் , தொழிலாளர்களுக்கு, குறிப்பாக கம்பியாளருக்கு, ஏற்படும் பாதிப்பினை சீர்படுத்திடும் பொருட்டு 30-5-2016 அன்று நிர்வாகத்துடன் நாம் நடத்திய பேச்சுவார்த்தை பற்றி 31-5-2016-ல் அனுப்பிய சுற்றறிக்கை எண் 7-ல் தெரிவித்திருந்தோம். பேச்சுவார்த்தை இதர சங்கங்களோடு

3.6.2016 வரை நடைபெற்றுக்கொண்டிருந்த போதே அனைத்து பதவி உயர்வுகளையும் நிறுத்திவைத்திட வேண்டும் என்று 1-6-2016-ல் அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளருக்கும் உத்திரவிடப்பட்டது. இதனால் ஏற்படும் சாதக பாதகங்களை பரிசீலனை செய்யவும் , விரைவில் ஒப்பந்தத்தை முடிப்பதற்கும் ஒரு இணக்கமான சூழ்நிலை ஏற்படுத்த சம்மேளனம் , நமது சங்கம் , தொ.மு.ச. , மத்திய அமைப்பு மற்றும் ஐ.என்.டி.யு.சி.(சேவியர்) ஆகிய சங்கங்களின் ஆலோசனைக்குழுக் கூட்டம் 9.6.2016 முற்பகல் சென்னையில் நடை பெற்றது.

3. 9-6-2016 அன்று மதியம் நமது சங்கத்தின் சார்பில் , நிதிச்செயலாளர், சென்னை மண்டலச்செயலாளர் திரு.விஜயபாஸ்கர், வேலூர் மண்டலத்தின் முன்னாள் மண்டலச்செயலாளர் திரு.T.தயாளன் , சென்னை வடக்கு வட்டச்செயலாளர் திரு.முரளி, சென்னை தெற்கு வட்ட செயலாளர் திரு.அன்பழகன் மற்றும் சென்னை பொறுப்பாளர்களுடன் கோட்டைக்குச் சென்று மாண்புமிகு. மின்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் பட்டாடை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தோம். அமைச்சர் நமது சங்க பொறுப்பாளர்களை அன்புடன் வரவேற்று இனிமையாகப்பேசினார் என்பதை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

4. 9-6-2016 அன்று ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி மின்வாரியத்தலைவர் அவர்களை 13.6.2016 அன்று சந்தித்து களப்பிரிவு பதவி உயர்வினை நிறுத்திவைத்திருக்கும் உத்திரவு அப்படியே இருக்கவேண்டும் என்றும் ஒப்பந்தத்தை விரைந்து முடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம். மின்வாரியத் தலைவரும் அதனை ஏற்றுக்கொண்டார். இருப்பினும் பதவி உயர்வினை நிறுத்த வேண்டும் என்ற 1.6.2016 தேதியிட்ட உத்திரவு திரும்பப் பெறப்பட்டு உத்திரவு வெளியாகிவிட்ட சூழ்நிலையிலும் 11,12 தேதிகள் விடுமுறையானதாலும் 13-06-2016 அன்று மின்வாரியத்தலைவருடன் சங்கங்கள் பேசியபடி பதவி உயர்வினை நிறுத்திவைக்க வேண்டும் என்ற உத்திரவு மீண்டும் அனுப்பப்பட்டது. ஆனால் 14.6.2016 அன்று தொ.மு.ச. , ஐக்கிய சங்கம், ஜனதா ஆகிய சங்கங்கங்கள் மின்வாரியத் தலைவருக்கு முறையிட்டதன் பேரில் பதவி உயர்வினை தொடர்ந்து வழங்கிட ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த உத்திரவின் மீது BMS சங்கம் நீதிமன்ற தடை பெற்றதால் மறு அறிவிப்பு வரும் வரை பதவி உயர்வுகளை நிறுத்தி வைக்குமாறு வாரியம் உத்திரவிட்டுள்ளது. ஒரே பிரச்சனையில் 15 தினங்களுக்குள் 6 உத்திரவுகள் முன்னுக்குப்பின் முரணாக வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய குழப்பம் நாம் அறிந்து மின்வாரிய வரலாற்றில் நடைபெற்றதில்லை. குழப்பம் விரைவில் விலகி ஒப்பந்தம் காணப்பட்டு தொழிலாளர்கள் மனநிறைவுடன் பணியாற்றும் சூழ்நிலை ஏற்படும் என நம்புகிறோம்.

5. மத்திய அலுவலகத்தில் பணிப்பகிர்வுகளையும், பணியாளர் எண்ணிக்கையையும் வரையறுத்திட வேண்டும் என்ற நமது சங்கத்தின் கோரிக்கையின் மீது தொழிலாளர் தீர்ப்பாயத்தில் நடைபெற்று வந்த வழக்கில் இப்பிரச்சனை குறித்து மின்வாரியம் அனைத்து சங்கங்களுடன் பேசி சுமுக தீர்வுகாணுமாறு 13.6.2016 அன்று

உத்திரவிடப்பட்டுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வுத்திரவினை தொடர்ந்து விரைவில் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்திடுமாறு நிர்வாகத்திற்கு கடிதம் கொடுத்துள்ளோம். இந்த வாய்ப்பினை பயன் படுத்தி மத்திய அலுவலகங்களை பலப்படுத்திட வாரியத்தை வற்புறுத்திட வேண்டும் என்று அனைத்து தொழிற்சங்கங்களையும் வேண்டி 20-06-2016-ல் கடிதம் எழுதியுள்ளோம்.

6. நமது சங்கத்தின் உயர்மட்ட பொறுப்பாளர்கள் கூட்டம் சென்னையில் 19-6-2016 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் விழுப்புரம் வட்டகிளைத்தேர்தல்கள் செல்லாது என்பதால் வட்டக்குழு காலாவதியானதாகவும், சென்னை மேற்கு வட்டத்தேர்தல் நிர்ணயிக்கப்பட்ட

தேதிக்குள் நடத்தி முடிவினை மத்திய சங்கத்திற்கு தெரிவிக்காததால் வட்டக்குழு காலாவதியானதாகவும் மத்திய சங்கம் அறிவித்தது. அவ்விரு வட்டங்களுக்கும் அமைப்பாளர்களையும் நியமனம் செய்தது. ஆனால் அவர்களிடம் சங்க அலுவலகம் வட்டக்குழு ஆவணங்கள் முதலியவற்றை ஒப்படைக்காதது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திரு.M.சண்முகசுந்தரம் முன்னாள் விழுப்புரம் வட்டச்செயலாளர், விழுப்புரம் வட்டத்தைச் சேர்ந்த திரு.தெய்வ சிகாமணி, திரு.நரசிம்மன் ஆகியோருடன் மத்திய சங்கத்திற்கு 21.6.2016 அன்று வந்திருந்து 8.6.2014 அன்று நடைபெற்ற சங்கத்தேர்தலில் தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் நிதிச்செயலாளர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டது செல்லாது என தன்னுடன் K.ஹரிதாஸ் மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர் தொடுத்திருந்த சென்னை உயர்நீதிமன்ற சிவில் வழக்கினை திரும்பப்பெறுவதற்கு ஒப்புக்கொண்டார். சங்க அலுவலகம் மற்றும் வட்டக்குழு ஆவணங்களை வட்ட அமைப்பாளர் திரு.N.பெரியசாமி அவர்களிடம் 29.6.2016 அன்று ஒப்படைப்பதாகவும், 3.7.2016 அன்று நடைபெறும் பொதுக்குழுவில் கலந்து கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தார். விழுப்புரம் வட்டத்தில் 2016-ம் ஆண்டிற்கான உறுப்பினர் சந்தாவினை வசூல் செய்து, கிளை மற்றும் வட்டக்குழு தேர்தல்களை 30.9.2016-க்குள் நடத்திட வட்ட அமைப்பாளர்கள் ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

7. ஆலோசனைக்குழுவில் மறைந்த திரு.M.முருகானந்தம் சட்டத்துறைச்செயலாளர் அவர்கள் குடும்பத்திற்கு உதவித்தொகை வழங்கிட ஆலோசனை மேற்கொள்ளப் பட்டது. 9 மண்டலங்களின் சார்பிலும் குறைந்தபட்சம் ரூ.10000- வசூலித்து தருவதாக தெரிவித்ததின் பேரில் ரூபாய் ஒரு லட்சத்தினை திருமதி. முருகானந்தம் அவர்களிடம் வழங்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

8. மத்திய சங்க கட்டிடத்தில் தரை தளத்தில் ஆறு கடைகளும் ஏற்கனவே வாடகைக்கு விடப்பட்டிருந்தது. தற்போது 2-வது தளத்தில் ஏற்கனவே சங்க அலுவலகம் செயல்பட்டு வந்த இடத்தையும் , இரண்டு கடைகளாகப் பிரித்து வாடகைக்குவிட ஏற்பாடு செய்துள்ளோம். மூன்றாவது தளத்தில் தலைமை சங்க அலுவலகம் கூட்ட அரங்குடன் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 2-வது தளத்தில் உள்ள கடைக்காரர்கள் சரக்குகள் கொண்டு செல்வதற்கும் , மூன்றாவது தளத்தில் நமது பொறுப்பாளர்கள் எளிதாகச் சென்று சங்கப் பணிகளை மேற்கொள்வதற்கும் ஏதுவாக LIFT வசதியினை செய்வதற்கு ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் 3.7.2016 அன்று திருப்பூரில் நடைபெறவுள்ள பொதுக்குழுவில் பரிசீலிக்கப்படவுள்ள பொருட்கள் பற்றியும் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டது,

9. கணக்கு மேலாளரிலிருந்து உதவிக்கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கிட சுமார் 65 பேர் கொண்ட பட்டியலுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள காலியிடங்களில் கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கிவிட்டு அதனால் வரும் காலிப்பொறுப்புகளை கணக்கில் எடுத்துக்கொண்டு கூடுமான வரை அனைத்து கணக்கு மேலாளர்களுக்கும் , உதவிக்கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

10. கணக்கு உதவியாளரில் இருந்து கணக்கு மேலாளர் பதவி உயர்வு வழங்கிட சுமார் 50 பேர் கொண்ட பட்டியலுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. விரைவில் வட்ட ஒதுக்கீடு வழங்கப்படவுள்ளது.

11. வருவாய் மேலாளரிலிருந்து மதிப்பீட்டு அலுவலர் பதவி உயர்வு ஏற்கனவே 52 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 30 பேருக்கு 24-6-2016-ல் வழங்கப்பட்டுள்ளது.

12. தொழில்நுட்ப உதவியாளரிலிருந்து இளநிலை பொறியாளர் 2-ம் நிலை மின்னியல் பதவி உயர்வு வழங்குவதற்கும், களப்பிரிவில் இருந்து பட்டயம் பெற்ற மற்றும் பெறாதவர்களுக்கு இளநிலை பொறியாளர் 2-ம் நிலை மின்னியல் பதவி உயர்வு வழங்குவதற்கும்,சுமார் 10 பேருக்கு இளநிலை பொறியாளர் சிவில் 2-ம் நிலை பதவி உயர்வுகளும் தொழில்நுட்ப உதவியாளர் உள்முகத் தேர்வு இளநிலை தணிக்கையாளர் உள்முகத் தேர்வு விரைவில் வழங்கப்படவுள்ளது.

13. 8-8-2010-க்குப் பிறகு சங்கத்தில் ஏற்பட்ட சோதனைகளை கடந்து 4 ஆண்டுகளுக்குப் பின் 8-6-2014-ல் சென்னையில் நடைபெற்ற தேர்தல் மூலம் சங்கம் புத்துயிர் பெற்றது. நமது தேர்தலை 20-6-2014-ல் அங்கீகரித்த சென்னை உயர்நீதிமன்றம் மாநிலத்தின் ஒரு பெரிய தொழிலாளர் சங்கம் ஜனநாயக முறையில் தொழிலாளர் நலம் காணும் வகையில் செயல்படுவதற்கு சுமுகமாகவும் சரியாகவும் தேர்தலை நடத்திக்கொடுத்த வழக்கறிஞர்-ஆணையர்களுக்கு தனது பாராட்டினை பதிவு செய்தது.

14. உயர்நீதிமன்றம் குறிப்பிட்டது போல ஜனநாயக முறையில் நடைபெறும் நமது சங்கத்தின் தேர்தல் 8-6-2014-க்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து 3-7-2016 அன்று திருப்பூர் பொதுக்குழுவில் நடைபெறவுள்ளது.

15. இரண்டாண்டுகளாக மின்வாரியத்தில் சிறப்பாக செயல்பட்டு வரும் நமது சங்கம் , நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கவும் , எதிர் வரும் ஊதிய உயர்வு மாற்றம் மற்றும் வேலை பளு திருத்தம் முதலிய தொழிலாளர் பிரச்சனைகளில் சங்கத்தை சரியான பாதையில் கொண்டு செல்ல வியூகங்கள் வகுத்திடவும் கூடிடுவோம் திருப்பூர் பொதுக்குழுவில். அனைவரும் வாரீர் என்று அன்புடன் அழைக்கின்றோம்.

தோழமையுள்ள

பொதுச் செயலாளர்.

பெறுநர் வட்டச்செயலாளர்கள்
வட்டத்தலைவர்கள்
மண்டலச்செயலாளர்கள்
மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.

நகல். செய்தி மடல்.

( குறிப்பு - கோட்டச்செயலாளர்கள் வட்டத்தலைவர்கள் மற்றும் இதர வட்டப்பொறுப்பாளர்கள் முகவரியினை கை பேசி எண்ணுடன் மத்திய சங்கத்திற்கு அனுப்பி வைத்தால் சுற்றறிக்கைகளும் குறுஞ்செய்திகளும் நேரடியாக அனுப்புவோம். இடைபட்ட காலத்தில் மத்திய சங்கத்தின் சுற்றறிக்கையினை நகல் எடுத்து அனைவருக்கும் தவறாமல் அனுப்பி வைத்திடுமாறு வேண்டுகிறோம்.)